flex

# அருள்

டிசம்பர் 2010

கடவுளை வணங்குங்கள் கருணையை பெறுங்கள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்கள் வீட்டை கோயிலாக்குவோம்

# நின்று நிலைக்கும் ஜோதிமயம்

# காவடி மார்க் கற்பூரம்




தயாரிப்பாளர்கள் :

**McSONS ORGANIS (PVT) LTD.**

**Ratmalana.**

ஏக விநியோகஸ்தர்கள் :



**பிரபா டிரேடிங் கம்பனி**



31, கபோஸ் லேன் கொழும்பு -11. தொலைபேசி : 2422750, 2329426

சந்தைப்படுத்துவோர் :

**P & A மார்க்கட்டிங் சர்விஸ், கொழும்பு - 03.**

தொலைபேசி : 4891021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| எமது நோக்கம் | 2 |
| இந்து சமயத்தின் அடிப்படைகள் | 3-6 |
| ஸ்ரீரங்கம் | 7-8 |
| திருநீறு அணியும் முறை | 9 |
| 14 கோடி லிங்கங்கள் | 10 |
| ராசி பலன் | 11-14 |
| நட்சத்திரங்களும் அதிஷ்டம் தரும் தெய்வங்களும் | 15 |
| பஞ்சாங்கம் | 16-18 |
| இந்து சமய விரதங்கள் | 19-20 |
| தேவாரமும், திருவாசகமும் | 21 |


## எமது நோக்கம்

இன்றைய கால கட்டத்தில் மனித சமுதாயம் எத்தனை எத்தனையோ பிரச்சினைகளையும் அவலங்களையும் எதிர் நோக்குகின்றது. இவற்றிற்கெல்லாம் மனிதனது அறியாமையோ அல்லது அறியும் ஆற்றல் இல்லாமையோ காரணம் அல்ல, இன்றைய மனிதன் எவ்வளவோ வளர்ந்துவிட்டான் அறிவிலும், ஆற்றலிலும். ஆனால் தனது முன்னோர் வழிவகுத்த மானுடக் கொள்கையை அதாவது நல்ல காரியங்களை அறிந்திருந்து அவற்றை உணர்ந்து அதன் படி ஒழுகுவதற்கு பின் தங்கி விட்டான்.

இன்று மனிதன் எதிர்நோக்குகின்ற துன்பங்கள், சண்டை சச்சரவுகள், நோய்கள், கொலை, களவு, கொள்ளை, மற்றவர்களைத் துன்புறுத்தல், புரிந்துணர்வின்மை இயற்கை அனர்த்தங்கள், யாவற்றிற்கும் தெய்வீக தன்மையற்ற மனிதனே காரணமாவான். இத்துன்பக்கடலில் சிக்கித் தவிக்கும் மனித சமுதாயத்திற்கு நிம்மதியும், சாந்தியும், மகிழ்ச்சியும் அருளவே பல அவதார புருஷர்கள் அவதரித்தார்கள்.

நல்லது செய்ய வேண்டும் என்று நினைத்தால் மட்டும் அது நடந்துவிடாது அதற்கு இறையருள் வேண்டும். நீங்கள் செய்யும் சேவை இறைவனுக்கல்ல உங்கள் கஷ்டத்தை குறைப்பதற்காக, உங்கள் கஷ்டத்திலிருந்து காப்பாற்றுவதற்காக இறைவன் தந்திருக்கும் சந்தர்பமிது. ஏதோ ஒன்று செய்யும் போது பலன் இருக்காது. ஒரு காரியத்திற்காக தெரிந்து செய்யும் போது, முழுமையாகச் செய்யும் போது அதற்குரிய பலன்கள் வந்து சேரும். சேவைதான் பாவத்தை போக்கும், புண்ணியத்தை தரும். இது தான் மனித வாழ்க்கையின் தத்துவம். எனவே இதனை மனதிற் கொண்டுதான் நாம் அருள என்ற ஆன்மீக இதழினை இலவசமாக மாதந்தோரும் வெளியிட உத்தேசித்துள்ளோம்.

இதன் மூலம் எமது வருங்கால சந்ததியினரின் இந்து மதத்தைப் பற்றிய அறிவினை மேலும் பெறுக்குவதோடு இவ் ஆன்மீக இதழினை வெள்ளவத்தையிலுள்ள சகல சைவசமய இல்லங்களுக்கும் இலவசமாக கிடைக்கப் பெறுவதே எமது நோக்கம்.

இதனை வாசித்து பெரியோர் முதல் சிறியவர்கள் வரை பயனடைய வேண்டும். கடவுளுடன் நம்முடைய உறவை வளர்ப்பது நிம்மதியையும், அமைதியையும் அளிக்கிறது. ஏனெனில் கடவுள் தான் எல்லா அமைதிக்கும், சந்தோஷத்திற்கும் மூல காரணம்.

ஆசிரியர்








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ௐ இந்து சமயத்தின் அடிப்படைகள்

சிந்துநதிக்கரையில் வசித்துவந்தவர்களை "சிந்துக்கள்" அல்லது "இந்துக்கள்" எனப் பாரசீகரும், கிரேக்கரும் அழைத்து வந்தனர். அவர்கள் பின்பற்றிய சமயமே இந்து சமயம் என்று சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்திய நாட்டினரின் மதமே இந்து மதம் எனப் பொருள் கூறுவாரும் உண்டு. ஒரு நாட்டின் பெயராலோ, ஒரு ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. அதனால் இதன் உண்மைப்பொருளை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்து மதம் எனும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும்.

இந்து அல்லது ஹிந்தி என்ற சொல்லை ஹிம்+து எனப் பிரிக்கலாம். ஹிம்-ஹிம்சையில் இது-துக்கிப்பவன் எனப்பொருள்படும். ஓர் உயிர் எந்த காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அத்துயரத்தை தனக்கு ஏற்பட்ட துயரமாகக் கருதி அகற்ற முன்வரவேண்டும். அத்தகையவனே இந்து ஆவான். அப்பண்புமிக்க மக்களை கொண்ட மதமே இந்து மதமாகும்.

அன்பே கடவுள். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காமல் வாழ்கிறான். எல்லா உயிர்களின் உடம்பையே அவன் கோயிலாக கொண்டுள்ளான். ஆதலால் எந்த உயிரின் உடலுக்கும் துன்பம் நேராவண்ணம் அவைகளிடம் அன்பு செலுத்தினால் அருள் வடிவமாகிய ஆண்டவனது அருள் பெறலாம். இதனை திரு மூலர் தம் திருமந்திரத்தில்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே "

- என்கிறார்.

இந்து மதம் என்பதற்கு "சனாதன தர்மம்" என வேறு ஒரு பெயரும் உண்டு. இதற்கு அழிவில்லாத அறம் என்பது பொருள். மேலும் இந்து சமயம் முறையே திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்ந்நெறி, சன்மார்க்கம் என்ற பல பெயர்களைக் கொண்டது. சமயம் என்பதற்கு "சமை" என்பது பகுதியாய் உடம்பை வளர்ப்பதற்கு உணவுப் பொருளைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு பக்குவப் படுத்துவது இதன் பொருளாகும்.

இந்து சமயம் காலத்தால் மிகவும் தொன்மையானது. அது ஒரு காலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதை தற்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சி முதலியவற்றால் அறியலாம். பிற சமயங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்து சமயத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன. ஆதலால் உலகின் உள்ள எல்லா மதங்களுக்கும் தாய்ச் சமயமாக இந்து சமயம் உள்ளது என கூறலாம்.

### அறுவகைச் சமயங்கள்

இந்து சமயம் முறையே சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம் என்று ஆறுவகையாகப் பகுத்துக் கூறப்படுகிறது.

திருமூலர் இதனை "ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள்" என்று கூறுகிறார். முதலில் சைவம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொண்ட சமயம் "சைவம்" எனப்பட்டது. சைவத்தில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை மிகவும் விளக்கமாய் கூறப்படுகிறது. இவற்றை இறைவன் உயிர், தளை எனவும் கூறுவர்.

அடுத்து வைணவம் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைணவமாகும். இது வடகலை, தென்கலை என இருவகைப்படும். வடகலையார் வடமொழியில் உள்ள வேதசாத்திரங்களுக்கு முதலிடம் கொடுப்பர். தென் கலையார் தமிழ் மொழியில் உள்ள ஆழ்வார்களால் அருளப் பெற்ற பிரபந்தங்களுக்கு முதலிடம் தருவார்கள்.

இன்னொன்று காணாபத்யம். கணபதியே முழுமுதற்பரம் பொருள், ஓங்கார வடிவினனாக அவரை வழிபட வேண்டும் என்ற கோட்பாட்டை உடையது காணாபத்யம். இதனை காணாபத்யம் எனவும் கூறுவர்.

கௌமாரம் என்பது குமாரனாகிய முருகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள். பேரின்பவடிவினனாக அவனை வழிபட வேண்டும் என்ற கோட்பாட்டை உடையது. சக்தியை வழிபடு கடவுளாகக் கொள்ளும் சமயமே சாக்தம் ஆகும். சக்தி வழிபாடு-சக்தியே தெய்வம் அவரைத்தாயாக வழிபட வேண்டும் என்ற கோட்பாட்டை உடையது.

சூரியனை வழிபடுகடவுளாகக் கொள்வது சௌர சமயமாகும். பேரொளி வடிவினனாக அவனை வழிபட வேண்டும் என்று கூறுவது இச்சமயமாகும்.

சிவஞான சித்தியார், "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" கடவுள் இயங்குகிறார் என இயம்புகிறது. இதன் அடையாளமாகவே நமது சிவ ஆலயங்களில் கணபதி, முருகன், சூரியன், விஷ்ணு, அம்மையப்பர் மற்றும் துர்க்கையம்மன் ஆகிய திருவுருவங்களை அமைத்து வழிபாடு செய்து வருகின்றோம்.

**இந்து சமய இலக்கியங்கள்**

ஒவ்வொரு சமயத்திற்கும் முக்கியமான சமய நூல் ஒவ்வொன்று உள்ளது. நமது இந்துசமயத்திற்கும் வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாசம், புராணம் எனப் பல நூல்கள் உள்ளன.

வேதங்களானது தெய்வீகமான கருத்துகளைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர் பெற்றது. வேதங்களை வியாசர் நான்காக வகுத்துள்ளார். வேதங்களோடு தொடர்புடைய சம்ஹிதைகள், பிராம்மணங்கள், ஆரண்யகங்கள் மற்றும் உபநிடதங்கள் இந்து சமய இலக்கியங்களாய் பெருமை சேர்க்கின்றன.

அடுத்து ஆகமம். ஆகமம் என்றால் ஆன்மாக்களின் பாசங்களை நீக்கி வீடுபேற்றை அருளுதல். இவை மொத்தம் இருபத்தெட்டு ஆகமங்கள்.

தமிழ் கடவுள் சிவன் மீது பாடப்பட்டவை திருமுறைகள். திருமுறை என்பதற்கு தம்மை அடைந்தவர்களை சிவமேயாக்குகின்ற முறையெனப் பொருள் கூறுவர். திரு முறைகள் பன்னிரண்டு ஆகும்.

வைணவ சமயத்தில், விஷ்ணுவை தமிழ்ப் பாமாலைகளால் வழிபட்ட பன்னிரு ஆழ்வார்கள் அருளிச் செய்தவை நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் ஆகும்.

அதேபோல சாத்திரங்கள் இவை பதினான்கு சாத்திரங்கள். இவற்றை மெய்கண்ட சாத்திரங்கள் என்பர். இவற்றில் தலை சிறந்தது சிவஞான போதம். சிவம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருள். ஞானம் என்றால் அதனை அறிதல். போதம் என்றால் தெளிதல் எனவே சிவஞான போதம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய கடவுளை அறிந்து உதவும் நூல் என்று பொருள் இது மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பட்டது.

இதனையடுத்து அருணந்தி சிவாசாரிய சுவாமிகளால் இயற்றப்பட்டது சிவஞான சித்தியார் என்பதாகும். மேலும் உமாபதி சிவாசாரியாரால் எட்டு நூல்கள் எழுதப்பட்டன. மெய்கண்டார், அருள் நந்தி, உமாபதி சிவம் ஆகிய சந்தனாச்சாரியார்கள் சைவ சித்தாந்தத்தை முறைப்படுத்தியவர் என்ற பெருமை படைத்தோராவர்.

இந்தியாவின் இரு ஒப்பற்ற காவியங்கள் இராமாயணம் மற்றும் மஹாபாரதம் ஆகும். இதிகாசம் என்பதற்கு "ஐதீகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு" என்று பொருள். இராமாயண காவியத்தை இயற்றினார் வால்மீகி முனிவர். பாரதத்தை வியாச முனிவர் இயற்றினார். இதனை ஐந்தாம் வேதம் என்று சிறப்பத்துக் கூறுவர். பகவத்கீதை இதனுள் அடங்கி உள்ளது.

அடுத்து புராணம். புராணம் என்பதற்கு பழமையான வரலாறு என்பது பொருள். புராணங்களை எழுதியவர் வேத வியாசர் இதனை உலகிற்கு அளித்தவர் சூதபுராணிகர் என்பதை அறிவோம். இந்த மகாபுராணங்கள் பதினெட்டு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமயக் கோட்பாடுகள்

இந்து சமயம் வலியுறுத்தும் சாதாரண அறக் கோட்பாடுகள் தவிர முக்கியமானவை இரண்டு

1 வேதாந்த நெறிகள்

2 பகவத் கீதையில் கூறப்படும் நான்கு யோகங்களாகிய மார்க்கங்கள்.

வேதாந்த நெறிகள் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகும்.

அத்வைதக் கோட்பாட்டை உலகிற்களித்தவர் சங்கரர். அத்வைதம் என்னும் சொல்லை அ=துவைதம் எனப்பிரிக்கலாம் அ=இல்லை, துவைதம=இரண்டு. அத்வைதம் = இரண்டற்ற ஒன்று "அகம் பிரம்மாஸ்மி" -நான் பிரம்மமாய் இருக்கிறேன் என்பது. "பிரம்மம்" என்ற பொருளே உண்மை, நிலையானது. ஜீவன்கள் அனைத்துமே பிரம்மம் ஆவர். இறைவனைப் பரமாத்மா என்றும் உயிர்களை ஜீவாத்மா என்றும் ஒவ்வொரு ஜீவாத்மாவும் "பரமாத்மாதான்" என்பதே இவ்வுயரிய கோட்பாடு ஆகும்.

அதே போல விசிஷ்டாத்வைதம் இவ்வேதாந்த நெறியை உலகிற்கு அளித்தவர் இராமானுஜர் ஆவார். விசிஷ்ட + அத்வைதம் = விசிஷ்டாத் வைதம். அத்வைதம் இரண்டற்ற ஒன்றாக உள்ளது. விசிஷ்டம் - விசேஷம். விசிஷ்டாத் வைதமானது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒரே பொருளானவை என்றும் ஜீவாத்மா பரமாத்மாவிலிருந்து வெளிப்பட்டது என்றும் கூறுகிறது. சித்து, அசித்துச் சேர்க்கையால் விளங்கும் இரண்டற்றதான பிரம்மம் உண்டென்பதே உட்கருத்து.

அடுத்து துவைதம் இந்நெறியை அல்லது சமயத்தைப் பரப்பியவர் மத்துவர். இவர் துளுவ நாட்டில் உள்ள உடுப்பிக்கு அருகில் அநந்தேஸ்வரம் என்னும் கிராமத்தில் அவதரித்தார். தமது ஒன்பதாம் வயதில் அச்சுதபிரகாசரின் சீடராகி துறவு மேற்கொண்டார்.

இன்னொன்று துவைதம். துவி என்றால் இரண்டு. பிரபஞ்சமும், பரமாத்தாவும் வேறானவை. பரமாத்மா தனி, மற்றவை அதில் சேராதவை என்பதாகும். பரமாத்தா, ஜீவாத்மா, ஜட உலகம் - இவை எவராலும் உண்டாக்கப்படாத நித்தியப் பொருள்கள். உலகம் ஒரு தோற்றம் அன்று. சுதந்திரம் இறைவனுக்கு மட்டும் உண்டு. கர்மத்தை நீக்கினால் வீடுபேற்றை அடையலாம் என்பதை வலியுறுத்தும் கோட்பாடு.

## நான்கு மார்க்கங்கள்

மனிதன் தான் போகின்ற போக்கிலேயே விட்டால் அவன் படிப்படியாக நிதானமாய் வளர்ச்சியடைவான். மேலும் ஒருபடி சென்று தெய்வீகத் தன்மை அடையலாம். இப்படி காலத்தே வளர்ச்சி தானே நிகழும் என இரு தலை "எறும்பு வழி" அல்லது பிப்பீலிகா மார்க்கம் என்பர்.

மாறாக மனிதன் தன் உடல், மூச்சு, மனம், அறிவு ஆகியவற்றை பயன்படுத்தி பெருமுயற்சி செய்து இறையருளைப் பெற்று விரைவில் தன்னை முன்னேற்றிக் கொள்வது "விஹங்கம மார்க்கம" அல்லது "பறக்கும் வழி" எனப்படும். தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளும் மார்க்கங்கள் (நெறிகள்) முறையே, ஞான மார்க்கம், இராஜ மார்க்கம், கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம் - என்பனவாகும்.

இவை முறையே ஞான நெறி, இராஜ நெறி, கர்ம நெறி, மற்றும் பக்தி நெறி என்னும் யோகம் என்றும் போற்றப்படுகின்றன.

முதலில் ஞான மார்க்கம். கூர்மையான அறிவுடையவர்கள் நல்லதையும் கெட்டதையும் அறிந்து, என்றும் நிலைத்திருப்பதையும், விரைவில் அழிந்து விடுவதையும் சிந்தித்து உணரும் ஆற்றல் உடையவர்கள்.

இவ்வறிவின் துணை கொண்டு சத்தியத்தையும் முழுமையான பரம்பொருளை தேடும் வழியே "ஞான மார்க்கம்" எனப்படும்.

இரண்டாவது இராஜ மார்க்கம். மனிதன் சுய உணர்வுடன் உடம்பு, மூச்சு, மனம் இவற்றைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, தனக்குள்ளே ஒளிந்துகிடக்கும் சக்திகளைத் தூண்டி வெளிப்படுத்துவது "ராஜயோகம்" எனப்படும். இதுவே இராஜமார்க்கம் எனப்படுகிறது. இதன் இறுதி இலட்சியம் மனதில் அல்லது உணர்வில் தோன்றும் அலைகளை அடக்குவது ஆகும். "ஓம்" என்ற பிரணவம் இங்கு வழிபடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது கர்ம மார்க்கம். வாழ்க்கையில் மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் இரண்டு விதமான பயன்கள் இருக்க வேண்டும்.

ஒன்று அச்செயலினால் சமுதாயத்திற்கு லாபம் கிடைக்க வேண்டும், இரண்டு அச்செயல் அவனுடைய தெய்வ பக்தியை வளர்க்க வேண்டும்.

இந்த இருவிதமான பயன்கள் உடையவையாக ஒவ்வொரு செயலையும் ஆக்கும் விதியைக் கர்ம நெறி என்ற பெயரில் பகவத்கீதை உணர்த்துகிறது. தொழில் வாழ்க்கை, புறவாழ்க்கை என்ற வெளி வாழ்க்கையையும் குளித்தல், நடத்தல், உண்ணுதல், தானம் செய்தல் போன்ற சொந்த வாழ்க்கையின் செயல்கள் ஆகிய அனைத்துமே நமக்கு அக இன்பமும், சமுதாய நலமும், வளரும்படி செய்கின்றன. ஒரு மனிதன தன் சொந்த வாழ்க்கையில் செய்கின்ற ஆசனம், பிராணாயாமம், தவம், நன்நூலறிவு ஆகிய அனைத்தும் உலக நன்மைக்கும் உதவும்படி எல்லோரும் இன்ப வாழ்வுவாழ கீதை வழி சொல்கின்றது. எனவே சமுதாயத்தின் அங்கத்தினராகிய ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை முறையாகவும் திறமையாகவும் ஆற்றுவதை கர்ம மார்க்கம் எனலாம்.

நான்காவது பக்தி மார்க்கம். பரம்பொருள் மீது கொண்ட அன்பினால் மனிதன் அகந்தையை ஒழித்து, தன் சிறுமையைத் தவிர்த்து, உலகலாவிய உணர்வுள்ளவனாய் தியாகம், அன்பு வாயிலாக உயரிய நிலையை அடைவது பக்தி மார்க்கம். பக்தன் எதை நம்புகிறானோ அதுவாகவே தான் ஆகிவிடுகிறான் என்பது கீதையில் கண்ணன் கருத்து. இதை உணரும் விதம் நாம் பின் வருவனவற்றில் காணலாம். அடக்கமுடைய சரஸ்வதி போன்ற தெய்வங்களை வணங்கும் போது பக்தனும் பணிவுடையவன் ஆகிறான். பற்றற்ற சிவனாரை வணங்கும் போது பக்தனும் பற்றற்றவனாகிறான். அன்பு மிகுந்த கண்ணனை வணங்கும் போது பக்தனும் அன்புடையவனாகிறான்.

ஆறு குணங்களைக் கொண்ட இறைவனை பக்திப்பரவசத்தால் வழிபடும் போது நாமும் அந்த ஆறு நற்குணங்களை உடையவர் ஆகிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பூலோக வைகுண்டம் எனப் போற்றப்படும் ஸ்ரீரங்கம் (திருவரங்கம்), 108 வைணவத் தலங்களுள் முதன்மையானது. வைணவர்கள், 'கோயில்' அல்லது 'பெரிய கோயில்' என்று குறிப்பிட்டால் அது ஸ்ரீரங்கம் ஆலயத்தையே குறிக்கும். ஆழ்வார்கள் அனைவராலும் பாடப்பெற்ற வைணவத் தலம் இது மட்டுமே. ஸ்ரீரங்கம் ஆலயம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு சுமார் 156 ஏக்கர்.

உலகத்தின் எந்த மூலையில் இருந்தும் திருவரங்கம் இருக்கும் திசையை நோக்கி வணங்கினாலே போதும். இத்தலத்துக்கு நேரில் வந்து, இங்குள்ள சந்திர புஷ்கரணியில் நீராடி திருவரங்கனை தரிசித்த பலன் கிடைக்கும்.

ஒரு முறை கங்கை, காவிரி, யமுனை உட்பட புண்ணிய நதிக் கன்னியர்கள், இமயமலை அடிவாரத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது வான்மார்க்கமாகச் சென்ற கந்தர்வன் ஒருவன், இவர்களைப் பார்த்து வணங்கினான். உடனே, 'கந்தர்வன் வணங்கியது தன்னையே!' என்று நதிக் கன்னியர் தங்களுக்குள் வாதிட்டனர். இது வீண் விவாதம் என்றுணர்ந்த சிலர் விலகிக் கொள்ள, காவிரியும் கங்கையும் மட்டும் விவாதத்தைத் தொடர்ந்தனர்.

முடிவைத் தெரிந்து கொள்ள திருமாலை நாடினர். அவர், "கங்கை என் திருப்பாதத்தில் தோன்றியவள் அதலால் அவளே பெரியவள் கந்தர்வனின் வணக்கம் அவளையே சாரும்" என்றார். இதனால் வருந்திய காவிரி, தான் கங்கையை விட மேன்மை நிலை பெற வேண்டும் என்று திருமாலை எண்ணி தவம் இருந்தாள். அதனால் மகிழ்ந்த பகவான் அவள் முன் தோன்றி, "எதிர்காலத்தில் நான் உன் மடியில் சயனிப்பேன், அப்போது நீ கங்கைக்கு மேற்பட்டவளாவாய்" என்று அருளினார்.

அதன்படியே பிற்காலத்தில் காவிரியின் மத்தியில் ஒரு தீவும், சந்திர புஷ்கரணியும், அனந்த பீடமும் தோன்றின. ஆற்று நீர் சூழ மத்தியில் அமைந்துள்ள பகுதிக்கு அரங்கம் என்று பெயர். அதன்படி இந்தத் தீவு, இரு ஆறுகளின் (காவிரி மற்றும் கொள்ளிடம்) மத்தியில் இருப்பதாலும், லட்சுமி கடாட்சத்துடன் திகழ்வதாலும் ஸ்ரீரங்கம் அல்லது திருவரங்கம் எனப் பெயர் பெற்றது.

இங்குள்ள மூலவர் - ரங்கநாதர், பெரிய பெருமான் போன்ற திருநாமங்கள் உடையவர். உற்சவ மூர்த்தியான ரங்கராஜர், நம்பெருமாள் என்றும் அழகிய மணவாளன் என்றும் போற்றப்படுகிறார். ஸ்ரீரங்கம், நவக்கிரகங்களில் ஒன்றான சுக்கிர ஷேத்திரமாகவும் கருதப்படுகிறது.

வலக்கை திருமுடியைத் தாங்க, இடக்கை மலர்ப்பாதத்தை சுட்டிக்காட்ட, தெற்கு முகமாக இலங்கை நோக்கியபடி அருள் பாலிக்கிறார் மூலவர் ஸ்ரீரங்கநாதர்.

தர்மவர்மனின் காலத்துக்குப் பிறகு ஒரு முறை காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அதன் காரணமாக ஸ்ரீரங்கத்தில் கோபுர உச்சி வரை மணல் மேடிட்டு மூடியது. காடுகள் உண்டாகி ஸ்ரீரங்கம் கோயிலும், அதன் பிராகாரங்களும் புதைந்தன. ஒரு நாள் சோழ மன்னன் ஒருவன் வேட்டையாட வந்து, ஒரு மரத்தின் மேலே இருந்து ஒரு கிளி, ஸ்ரீரங்க விமானத்தைப் பற்றியும் ரங்கநாதப் பெருமாளைப் பற்றியும் (ஸ்லோகமாக) சொன்னது.

அதைப் கேட்டு வியந்த மன்னன் ஆட்களைக் கொண்டு அங்கே தோண்டிப் பார்த்தான். பலனில்லை, அன்றிரவு அவன் கனவில் திருவரங்கர் காட்சி கொடுத்து, தான் அங்கே பூமியில் புதையுண்டு கிடப்பதை அறிவித்தார். அரங்கன் சொன்னதை அறிந்த அரசன், காட்டை அழித்து மணலை நீக்கினான். கோயில் வெளிப்பட்டது. திருவீதி உட்பட அனைத்தையும் முதலில் இருந்தபடியே நிர்மாணித்தான். தன் நினைவுச் சின்னமாக 'கிளி' மண்டபத்தைக் கட்டி, திருப்பணிகள் பலவற்றையும் செய்தான். கிளியைக் கண்டு அதன் வாக்கின் மூலம் இறையருள் பெற்ற இந்த மன்னன் 'கிளிச்சோழன்' என்று அழைக்கப்பட்டான்.

இங்குள்ள கருட பகவான் மிகப் பெரிய உருவத்துடன் கூரையை முட்டியவாறு அமர்ந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீரங்கம் ஆலயத்தின் நிர்வாகம், கோயிலின் வரலாறு ஆகியவற்றை சீர்ப்படுத்திய பெருமை வைணவ ஆசார்யரான ராமானுஜரையே சாரும். 120 ஆண்டுகள் வாழ்ந்து வைணவ சம்பிரதாயத்துக்குத் தொண்டு புரிந்த ராமானுஜர் கி.பி 1137-ம் ஆண்டில் ஸ்ரீரங்கத்தில் பரமபதம் அடைந்தார்.

ஸ்ரீ ராமானுஜர் தன் உடலோடு சந்நிதி கொண்டது இங்குதான். இங்கு ஸ்ரீராமானுஜர் பத்மாசனக் கோலத்தில் தரிசனம் தருகிறார். இன்றும் அவரது சிகை மற்றும் நகங்களை நாம் தரிசனம் செய்யலாம். வருடத்துக்கு இரு முறை பச்சை கற்பூரம், குங்குமப்பூ போன்றவை விழுதாக அரைத்து அவரக்குப் பற்றாக உடலில் பூசப்படுகின்றன.

இங்கு உத்தர வீதியில் இரண்டு பிரம்மோற்சவங்கள், சித்திரை வீதியில் இரு பிரம்மோற்சவங்கள் என வருடத்தில் நான்கு பிரம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன.

ஆண்டுதோறும் வைகுண்ட ஏகாதசி அன்று ரத்னாங்கி அணிந்து உலா வரும் நம்பெருமாளை, படி தாண்டாத தாயார் தனது இடத்திலிருந்து, சந்நிதி முன் தரையில் உள்ள ஐந்து குழிகளிலும் தன் ஐந்து விரல்களை வைத்து மூன்று வாயில்கள் வழியாகக் கண்டு மகிழ்வாராம். அதைக் குறிக்கும் விதமாக தாயார் சந்நிதிக்குச் செல்லும் வழியில் ஐந்து குழிகள் தரையில் உள்ளன.

வைகுண்ட ஏகாதசி அன்று மூலவர், தசாவதாரம் சித்தரிக்கப்பட்ட முத்தங்கி அணிந்து காட்சி தருகிறார்.

இங்கு ஒரு வருடத்தில் 114 நாட்கள் விழா கொண்டாடப்படுகிறது.

எல்லா பெருமாள் கோயில்களிலும் மூலவருக்கு ஆனி ஜ்யேஷ்டாபிஷேகத்தன்று மட்டுமே தைலக் காப்பு சாத்தப்படும். ஆனால், ஸ்ரீரங்கத்தில் மட்டும் இத்துடன்கூட ஆவணி பவித்ரோற்சவத்தின் இறுதி நாளிலும் தைலக்காப்பு சாத்தப்படும். எனவே, ஸ்ரீரங்க நாதருக்கு மட்டும் இரு முறை தைலக்காப்பு.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீறு அணியும் முறை



சிவ சின்னமாக விளங்குவது திருநீறு "மந்திரமாவது நீறு" என்று போற்றுகிறார் ஞானசம்பந்தர்.

திருநீறு இட்டுக்கொள்வது சிறப்பானது. அதேசமயம் அதை அணிவதற்கும் சில விதிமுறைகள் உண்டு. திருநீறை கோயிலில் வாங்கும்போது வலது கையின் கீழ் இடது கையைச் சேர்த்து வாங்க வேண்டும். ஒற்றைக் கையை நீட்டி வாங்குதல் கூடாது.

வலக்கையில் பெற்றுக் கொண்ட திருநீறை இடக்கையில் தட்டி, அதிலிருந்து எடுத்துத் தரிக்கக் கூடாது. ஆணவம், கன்மம், மாயை எனும் முக்குற்றங்களும் நம்மை விட்டு அகல வேண்டும் என மனதில் நினைத்துக் கொண்டு வலக்கை நடுவிரல் மூன்றினால் திருநீறை எடுத்து வடக்கு அல்லது கிழக்கு முகமாக இருந்து நெற்றியில் தரித்தல் வேண்டும். நம்மைவிட வயதில் சிறியவர்களிடமிருந்து அவர் கையில் வைத்திருக்கும் திருநீறை அப்படியே எடுத்துத் தரிக்கக்கூடாது. அதை நம் இடக்கையில் இடச் செய்து, அதிலிருந்து எடுத்துத் தரிக்கலாம்.

## விபூதி இட்டுக்கொள்வதன் பலன்


சிவபெருமானை தியானித்து, தண்ணீருடன் சேர்த்துக் குழைத்து, மூன்று கோடுகளாக விபூதியை இட்டுக் கொள்ளல் வேண்டும். இதற்கு திரிபுண்டரம் என்று பெயர். மூன்று வகைப்பாவங்களைப் போக்கும் விபூதியின் மூன்று கோடுகள் மகத்தானவை.

**முதல் கோடு:**
அகாரம், கார்ஹபத்யம், ரிக்வேதம், பூலோகம், ரஜோகுணம், ஆத்மா, க்ரியாசக்தி, அதிகாலை மந்திரத்தின் தேவதை மஹாதேவன் ஆகியவை அடங்கியது.

**இரண்டாவது கோடு:**
உகாரம், தட்சிண அக்னி, ஆகாயம், யஜுர்வேதம், சத்வகுணம், பகல்நேர மந்திரதேவதை, இச்சாசக்தி, அந்தராத்மா, மகேஸ்வரன் ஆகியோர் இதில் உள்ளனர்.

**மூன்றாவது கோடு:**
மகாரம், ஆவஹனீயம், பரமாத்மா, தமோகுணம், சுவர்க்கம், ஞானசக்தி, ஸாமவேதம், மாலைநேர மந்திர தேவதை, சிவன் ஆகியோர் இதில் உள்ளனர்.

சிவபெருமானை எண்ணி விபூதியை அணிவதே "மாஹேஸ்வர விரதம்" எனப்படும். இந்த விரதம் எல்லா பாவங்களையும் நீறாக்கும் மோட்சம் தரும்; பயம் போக்கும்.



# ஈசனை விட்டு விலகாத 8 பேர்

ஒருபோதும் சிவபெருமானைவிட்டு நீங்காது இருப்போர் எட்டுப்பேர். நந்தி, பிருங்கி முனிவர், கணபதி, அந்தர், மகாகாளன், உமா, விருஷபர், சண்டீஸ்வரர் ஆகியோரே அவர்கள். இவர்களை அஷ்ட பரிவாரம் என்பார்கள்.

நாதத்தின் வடிவமான நடேசன், நாதன் என்ற திருப்பெயரோடு வழிபடப்படுவது கேதாரநாதம், பத்ரிநாதம், பசுபதி நாதம், அமரநாதம், கைலாயநாதம் ஆகிய தலங்களில். இந்த ஐந்து சிகரங்களும் சிவ பெருமானின் ஐந்து முகங்களின் வடிவமாக வழிபடப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 கோடி லிங்கங்கள்

சர்வேஸ்வரனின் லிங்க வடிவில், பல வகைகள் உண்டு. அவற்றுள் ஒன்று, பாணலிங்கம். பாணம் என்றால் நீர் என்று பொருள். நர்மதை ஆற்றின் நீரிலிருந்து பிறப்பதாலும் பாணாசுரன் என்ற அசுரனால் பூஜிக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டதாலும் பாணலிங்கம் என்று பெயர். முட்டை வடிவ கற்களாகக் கிடைப்பவை இவை. மலைகளில் உற்பத்தியாகி அருவி வழியாக பல புண்ணிய தலங்களைக் கடந்து ஓசை மற்றும் உராய்வுகளால் முட்டை வடிவ லிங்கங்களாக உருமாற்றம் பெறுகிறது.

இத்தகைய ஜீவ சுயம்பு லிங்கங்கள் நர்மதை நதி மற்றும் பல புனித இடங்களிலிருந்து 14 கோடி உற்பத்தியாகி இருக்கின்றன என்று மகரிஷிகளால் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் 3 கோடி பாணலிங்கங்கள் சிவலிங்க மலையிலும், 3 கோடி ஸ்ரீசைலத்திலும், 3 கோடி காளிகா தீர்த்தத்திலும், 1 கோடி மகேந்திர மலையிலும் (பாபாநாசம் பொதிகை மலை), 1 கோடி மகேஸ்வர மலையிலும், 1 கோடி நேபாளத்திலும், 1 கோடி கணையாச்வயம் என்ற இடத்திலும் இருக்கின்றன என்கின்றன புராணங்கள். பாணலிங்கத்தைப் பற்றி மனதார நினைத்தாலே போதும், பண்ணிய பாவங்கள் யாவும் விலகும் என்பது ஐதிகம்.




இன்பம் பொங்க
மணப்பந்தலில் அமர்ந்திருக்கும்
மணமக்கள்...



For all your Flower needs





- Manavarai
- Flower Decorations
- Koolam
- Kumbam
- Gurukkal (Iyar)
- Melam
- Garland (Maalai)
- Pillaiyar Decorations
- Puberty Ceremoney
- Arangetram



UMESH
23A, 36th Lane, Wellawatte.
Hotline :-077 9995701. Tel:- 2362068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசி பலன்




**அதிர்ஷ்ட நாட்கள்:** 4, 9, 13, 18, 22, 27, 31

**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:** 1, 2, 3, 23, 24

இடத்திற்கு மாறிய நிலையில், சுபகாரிய சுபவிரயங்கள் அதிகரிக்கும். வண்டி வாகனச் சேர்க்கைகளும் உண்டு. தேவைக்கு அதிகமாக கடன் வாங்குவதை தவிர்ப்பது உங்கள் எதிர்கால நலனுக்கு அவசியமான ஒன்று. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அனுகூலத் திருப்பங்கள் ஏற்படும். பதவி உயர்வு, சம்பள உயர்வு வேண்டிய இடமாற்றங்கள் வந்து சேரும். வெளியூர், வெளிநாடு சம்பந்தமான உத்தியோக முயற்சிகளில் வெற்றி ஏற்படும். சுயதொழில் வியாபாரத்தில் பழைய கடன் காட்சிகளை பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. தாமதம் அடைந்து வந்த தொழில் வாய்ப்புகள் வந்து சேரும். வங்கிகளில் எதிர்பார்க்கும் உதவித் தொகைகள் திட்டமிட்டபடி கைக்கு வந்து சேரும். கூட்டுத் தொழில்களில் கூட்டாளிகளுடன் ஒற்றுமையும், புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடும்படியான சூழ்நிலையும் தேவைக்கேற்ற பணவரவும் உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் நிறைந்து காணப்படும். தாமதம் அடைந்து வந்த சுபகாரிய, சுபமுயற்சிகள் யாவும் திட்டமிட்டபடி நிறைவேறும். கலைஞர்களுக்கு தொழில் மேன்மை, ஸ்திர சொத்து சேர்க்கை உண்டாகும். அரசியல் பொதுச்சேவையில் தொடர்புள்ளவர்களுக்கு சகல முயற்சிகளிலும் எதிர்பாராத வகையில் அனுகூலத் திருப்பங்கள் ஏற்படும்.




**அதிர்ஷ்ட நாட்கள்:** 3, 12, 21, 23, 30

**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:** 1, 2, 4, 5

பூமி, மனைகளில் ஆதாயங்களும் தாயாருடைய வழிகளில் வேண்டிய உதவிகளும் கிடைக்கும். உத்தியோகத்தில் இதுநாள் வரையில் இருந்து வந்த தடைகள் யாவும் படிப்படியாக விலகி பணிபுரியும் இடத்தில் சுமூகமான உறவுகள் நிலவும். மேலதிகாரிகள் சகஊழியர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகளும், ஒத்தாசைகளும் அனுபவபூர்வமாக வந்து சேரும். புதிய உத்தியோக சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி உண்டாகும். பழைய கடன் காட்சிகளை பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. தாமதம் அடைந்து வந்த தொழில்கள் யாவும் இக்காலங்களில் வந்து சேரும். கூட்டுத் தொழில்களில் உற்சாகமுடன் ஈடுபடும்படியான சூழ்நிலை அமைவதுடன் தேவைக்கேற்ற பணவரவும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் வந்து சேரும். பெண்களுக்கு இது ஒரு அதிர்ஷ்டம் நிறைந்த மாதமாகும். கலைஞர்களுக்கு தொழில் மேன்மை, வண்டி வாகன சேர்க்கை, புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அரசியல் பொதுச் சேவையில் தொடர்புள்ளர்களுக்கு இது ஒரு அற்புதமான காலப்பகுதியாகும்.




**அதிர்ஷ்ட நாட்கள்:** 1, 5, 6, 10, 14, 15, 23, 24

**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:** 7, 8, 9

மறைமுக-நேர்முக எதிர்ப்புகளால் விரோதங்கள் காணப்படுவதால் சகல முயற்சிகளிலும் பொறுமையுடன் செயல்படுவதும், தெய்வ பலத்தை அபிவிருத்தி செய்து கொள்வதும் உத்தமம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகத்தில் மேலதிகாரிகள் வகையில் வீண் விவாதங்கள் குறைத்துக் கொள்வதும், சகஊழியர்களுக்குள் ஒற்றுமையை அபிவிருத்தி செய்து கொள்வதும் உத்தமம். புதிய உத்தியோக சம்பந்தமான முயற்சிகளில் நிதானம் தேவை. சுயதொழில் வியாபாரத்தில், பொருளாதாரத்தில் நெருக்கடிகளும், கொடுக்கல் வாங்கல் வகையில் சிக்கல்களும், புதிய தொழில்களில் போட்டி பொறாமைகளும் ஏற்படும். கூட்டுத் தொழில்களின் கூட்டாளிகள் தொழிலாளர்களுக்கிடையே ஒற்றுமையை அபிவிருத்தி செய்து கொள்வது உத்தமம். குடும்பத்தில் புதிய புதிய செலவினங்களும் மறைமுக எதிர்ப்புகளும், நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் வகையில் சகஜ நிலை மாறி சங்கடமான சூழ்நிலைகளும் அபிவிருத்தி அடையும். கலைஞர்கள் தொழில்களில் சிந்தித்து செயல்படுவது அவசியம். அரசியல் பொதுச்சேவையில் தொடர்புள்ளவர்களுக்கு அலைச்சல்-திரிச்சல்களும் இனம்புரியாத குழப்பங்களும் ஏற்படும்.

**அதிஷ்ட நாட்கள்:** 3, 4, 6, 8, 12, 13, 15, 17, 19, 21, 22, 24, 26, 28, 30, 31

**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:** 14, 16, 18, 20




ராசிநாதன் புதன் ஏழாமிடத்தில் சஞ்சாரம் செய்வதால் அடைந்து வந்த சுபகாரியங்கள் நிறைவேறுவதுடன் மனதிற்கு இனிய சம்பவங்களால் மகிழ்ச்சி ஏற்படும். பொருளாதார மேன்மை, திட்டமிட்ட காரியங்களில் வெற்றி, தேவைக்கேற்ற பணவரவு உண்டாகும். உத்தியோகத்தில் உற்சாகமான மனநிலையும், புதிய முயற்சிகளில் வெற்றியும், மேலதிகாரிகளின் பாராட்டும், சக ஊழியர்கள் வகையில் அனுசரணையும் உத்தியோக வகையில் எதிர்பார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசி பலன்

கடன் தொகை வந்து சேரும். சுயதொழில் வியாபாரத்தில் எதிர்பாராத முன்னேற்றமும் புதிய துறைகளில் ஈடுபடும் வாய்ப்பும் புதிய தொழில் அமையும் பாக்கியமும் உண்டாகும். வெளிநாட்டுத் தொடர்புடைய தொழில்களில் சமீபகாலமாக நிலவிய சங்கடங்கள் யாவும் படிப்படியாக விலகும். கூட்டுத் தொழில்களில் வெற்றி ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும், உடல் ஆரோக்கியத்தில் மேன்மை ஏற்படும், நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் திட்டமிட்டபடி வந்து சேரும். பெண்களுக்கு பொன்-பொருள், ஆடை-ஆபரண சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு தொழில் முன்னேற்றம் தேவைக்கேற்ற பணவரவு, புதிய வாய்ப்புகள் வந்து சேரும். அரசியல் பொதுச்சேவையில் உள்ளவர்களுக்கு இது ஒரு அற்புதமான காலப்பகுதியாகும்.




**அதிர்ஷ்ட நாட்கள்:**
5, 6, 7, 14, 15, 16, 23, 24, 25

**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:**
1, 2, 3, 4, 22

ஆரோக்கியமான வகையில் முன்னேற்றகரமான சூழ்நிலைகளும், எதிர்பார்க்கும் புதிய கடன்களும் வந்து சேரும். உத்தியோகத்தில் உங்களுடைய மதிப்பும் மரியாதையும் உயரும் காலமிது. இடமாற்றத்திற்கான முயற்சிகள் அனுகூல சூழ்நிலை அமையும். புதிய உத்தியோக சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சுயதொழில் வியாபாரத்தில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படும் வங்கிகளின் மூலமாக எதிர்பார்க்கும் கடன் தொகை, தொழில் உபகரணங்கள் கைக்கு வந்து சேரும். கூட்டு தொழில்களில் கூட்டாளிகளுக்குள் ஒற்றுமையும் தேவைக்கேற்ற பணவரவும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும், சகோதர சகோதரிகள் வகையில் இணக்கமான சூழ்நிலை நிலவும் சுபகாரிய - சுப செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு முயற்சிகளில் முன்னேற்றமும், மனதிற்கு மகிழ்ச்சியான சூழ்நிலை அமையும், கலைஞர்களுக்கு இது ஒரு முன்னேற்றமான மாதமாகும். புதிய தொழில் வாய்ப்புகளால் ஸ்திர சொத்து சேர்க்கைகள் உண்டாகும், அரசியல் பொதுசேவையில் தொடர்புள்ளவர்களுக்கு மறைமுக-நேர்முக எதிரிகள் எதிர்புகளால் வீண் சங்கடங்கள் உருவாகக்கூடும் சகல காரியங்களிலும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து நிதானமுடன் செயல்படுவது உத்தமத்தில் உத்தமம்.

வாகனங்கள் ஓட்டும்போது கவனம் தேவை உத்தியோகத்தில் மேலதிகாரிகள் பாராட்டும்படியான சூழ்நிலையும், சகஊழியர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகளும் வந்து சேரும். புதிய உத்தியோகத்திற்கு முயற்சி செய்து வருபவர்களுக்கு இன்டர்வியூ கார்ட் வந்து சேரும், சுயதொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான சூழ்நிலை உண்டாகும். தேவைக்கேற்ற பணவரவு, ஸ்திர சொத்து சேர்க்கைகள் ஏற்படும். புதிய தொழில் சம்பந்தமான முயற்சிகளில் அனுகூல தகவல்கள் வந்து சேரும். குடும்பத்தில் வீண் விவாதங்கள் குறைத்துக் கொள்ளுவதும், ஒற்றுமையான சூழ்நிலையை கடைப்பிடிப்பதும் உத்தமம். தாய் வழி உதவிகள் உங்களை தேடி வரும். உறவினர்கள் மத்தியில் உங்களுடைய மதிப்பும்-மரியாதையும் கூடும். பெண்களுக்கு சகல முயற்சிகளிலும் நிதானம் தேவை. கலைஞர்களுக்கு தொழில் மேன்மை, லட்சுமிகடாட்சம் நிறைந்த வாழ்க்கை ஏற்படும். அரசியல் பொதுச்சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நெருக்கடிகள் குறைந்து சாதகமான சூழ்நிலை ஏற்படும். வெகுஜன செல்வாக்கும், பெரியவர்களின் ஆசியும் அனுபவபூர்வமாக அமையும்.




**அதிர்ஷ்ட நாட்கள்:**
4, 9, 13, 18, 22, 27, 31

**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:**
1, 2, 4, 5, 7




**அதிர்ஷ்ட நாட்கள்:**
4, 6, 9, 13, 15, 18, 19, 22, 24, 27, 28, 31

**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:**
16, 17, 20, 21, 23

வீடு, மனை, நிலம் வாங்கும் யோகம் அமையும், வண்டி வாகன சேர்க்கை ஏற்படும், தாய் வழி உதவிகளும் கிடைக்கும், உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகத்தில் ஒற்றுமை நீடிப்பதுடன் மேலதிகாரிகள்-சகஊழியர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் வந்து சேரும். புதிய உத்தியோகம் சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி ஏற்படும், சுயதொழில், வியாபாரத்தில் எல்லா வகையிலும் அனுகூல திருப்பங்கள் உண்டாகும். தொழில் சம்பந்தமாக நிலவி வந்த போட்டி-பொறாமைகள் விலகி அனுகூல நிலை ஏற்படும். வெளியூர்-வெளிநாட்டிலிருந்து எதிர்பார்க்கும் அனுகூல தகவல் வந்து சேரும். கூட்டுத் தொழில்களில் கூட்டாளிகளுக்குள் ஒற்றுமை நீடிக்கும், குடும்பத்தில் சகஜமான சூழ்நிலை ஏற்படும். தாமதம் அடைந்து வந்த சுபகாரியங்கள் நிறைவேறும். உறவினர்கள்-நண்பர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் திட்டமிட்டபடி வந்து சேரும். பெண்களுக்கு முயற்சிகளில் பலிதமும், குடும்பத்தில் ஒற்றுமையான சூழ்நிலையும் ஏற்படும். கலை, அரசியல், பொதுச் சேவையில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு சகல முயற்சிகளில் அனுகூலங்களும், வெகுஜன செல்வாக்கும், பெரியவர்களின் ஆசியும், ஸ்திர சொத்து சேர்க்கைகளும் வந்து சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசி பலன்




**அதிர்ஷ்ட நாட்கள்:**
3, 6, 8, 15, 17, 21, 24, 26, 30
**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:**
2, 23, 25, 27

சுகசௌகரிகமான சூழ்நிலையும், சரளமான பணவசதியும் ஏற்படும். மேற்கொள்ளும் முயற்சிகளில் வெற்றி ஏற்படும், உத்தியோகத்தில் மேலதிகாரிகள் பாராட்டும்படியான சூழ்நிலையும், சகஊழியர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகளும் திட்டமிட்டபடி வந்து சேரும் புதிய உத்தியோகம் சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சுயதொழில் வியாபாரத்தில் மறைமுக-நேர்முக எதிரிகள் எதிர்ப்புகளால் எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படுவதற்கில்லை. பழைய கடன் காட்சிகள் யாவும் படிப்படியாக விலகி தொழில் மேன்மையும், தேவைக்கேற்ற பணவரவும் ஏற்படும். கூட்டுத் தொழில்களில் உற்சாகமும், இனிமையுமான சூழ்நிலை நிலவும், குடும்பத்தில் சந்தோஷமான நிகழ்ச்சிகள் நடைபெறும் நெறுங்கிய உறவினர்கள்-நண்பர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் திட்டமிட்டபடி வந்து சேரும், கலைஞர்களுக்கு தொழில் மேன்மை தேவைக்கேற்ற பணவரவு ஸ்திர சொத்து சேர்க்கை ஏற்படும். அரசியல் பொதுச்சேவையில் தொடர்புள்ளவர்களுக்கு எதிர்ப்புகள் விலகுவதுடன் மக்கள் மத்தியில் செல்வாக்கும், பெரியவர்களின் ஆசியும், மேலிடத்தின் ஆதரவும் அனுபவபூர்வமாக வந்து சேரும்.

முயற்சிகளில் வெற்றியும், தனலாபங்கள் பல்வேறு வழிகளிலும் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள், சகஊழியர்கள் வகையில் இருந்து வந்த சகலவிதமான சங்கடமான சூழ்நிலைகள் விலகி ஒற்றுமையும், உறவு முறையில் திருப்தியான போக்கும் நிலவும். ஒரு சிலருக்கு வேண்டிய இடமாற்றம், பதவி உயர்வு, சம்பள உயர்வு வந்து சேரும். புதிய உத்தியோக முயற்சிகளில் வெற்றி ஏற்படும். சுயதொழில், வியாபாரத்தில் ஏற்பட்ட சங்கடங்களும், சிரமங்களும் படிப்படியாக விலகும். போட்டி - பொறாமைகளால் பலவிதமான சங்கடங்களை அனுபவித்து வந்தவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை ஏற்படும். சகோதர - சகோதரிகள், உறவினர்கள் - நண்பர்கள் வகையில் இருந்த கருத்து வேறுபாடுகள் படிப்படியாக விலகும். கலைஞர்கள் தொழில் மேன்மை, தனலாபம் ஏற்படும். அரசியல், பொதுச்சேவையில் தொடர்புள்ளவர்களுக்கு சோதனைகள் விலகி தெளிவான மனநிலையோடு செயல்படும்படியான சூழ்நிலை அமையும்.




**அதிர்ஷ்ட நாட்கள்:**
1, 6, 10, 15, 24
**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:**
2, 3, 4, 5




**அதிர்ஷ்ட நாட்கள்:**
1, 5, 7, 10, 14, 16, 19, 23, 25, 28
**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:**
31, 12, 21, 30

எதிரிகள் உங்களைக் கண்டால் பயந்து நடுங்குவர். சுபகாரிய சுபவிரயங்களுக்கும் இந்த மாதம் பஞ்சமிராது. வீடு, வாகன யோகங்களும் ஒரு சிலருக்கு உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் பாராட்டும்படியான சூழ்நிலைகளும், சகஊழியர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகளும் தக்க சமயத்தில் வந்து சேரும். புதிய உத்தியோக சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி உண்டாகும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு, வேண்டிய இடமாற்றங்கள் ஏற்படும். சுயதொழில், வியாபாரத்தில் மறைமுக - நேர்முக எதிர்ப்புகளால் தொழில்களில் போட்டி பொறாமைகளும், பழைய கடன் காட்சிகளால் வீண் நெருக்கடிகளும் காணப்படுவதால் சகல முயற்சிகளிலும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து, திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் தொழில் மேன்மை, தேவைக்கேற்ற பணவரவு உண்டாகும். புதிய முயற்சிகளில் நிதானம் தேவை. கூட்டு தொழில்களில் இருப்பவர்களுக்கு கூட்டாளிகளுடன் சகஜநிலையும், புதிய தொழில் வாய்ப்புகளும் வந்து சேரும். குடும்பத்தில் வரவுக்கு மிஞ்சிய செலவினங்களால் அலைச்சல், திரிச்சல்களும் பொருள் விரயமும் உண்டாகும். கலைஞர்களுக்கு சகல காரியங்களிலும் நிதானம் தேவை. அரசியல், பொதுச்சேவையில் தொடர்புள்ளவர்களுக்கு திட்டமிட்ட காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**அதிருஷ்ட நாட்கள்: 1,3,4,5,6,9,10,12,13,14,15**
**கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்: 7,8,16,17,25,26**

எதிரிகள் அடங்கி இருப்பர். ஒரு சிலருக்கு திசாபுக்திகள் சாதகமாக இருப்பின் வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். கடன்காட்சிகள் படிப்படியாக குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திட்டமிட்ட காரியங்களில் வெற்றியும், புதிய உத்தியோகம், பதவி உயர்வு, இடமாற்றம் போன்றவை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு அனுகூலத் தகவல்களும் வந்து சேரும். சுயதொழில், வியாபாரம் போன்ற வகையில் பொருளாதார மேன்மையும், தேவைக்கேற்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசி பலன்

பணவரவும், தாமதம் அடைந்து வந்த புதிய வாய்ப்புகள் வந்து சேரும் பாக்கியமும் உண்டாகும். சகல முயற்சிகளிலும் நிதானம் தேவை. குடும்பத்தில் ஒற்றுமை நிலவிய போதிலும் வரவுக்கு மிஞ்சிய செலவினங்களும் சகோதர - சகோதரர்கள் வகையில் ஒற்றுமையும், தாமதம் அடைந்த தெய்வீக ஸ்தல பயணங்களும் நிறைவேறும். கலைஞர்களுக்கு தொழில்துறையில் முன்னேற்றமும், லட்சுமி கடாட்சமும், வெளி வட்டாரத்தில் நல்ல புகழும் ஏற்படும். அரசியல், பொதுச்சேவையில் தொடர்புள்ளவர்களுக்கு தீய நண்பர்களின் சேர்க்கையை குறைத்துக் கொண்டு நல்ல நண்பர்களின் சேர்க்கையை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் சகல காரியங்களிலும் வெற்றியும், மேலிடத்தின் ஆதரவும் அனுபவபூர்வமாக அமையும்.




அதிர்ஷ்ட நாட்கள்:
6, 15, 19, 24, 28

கவனமாக இருக்க வேண்டிய நாட்கள்:
1, 2, 3, 4, 7, 8, 25, 26

உடல் ஆரோக்கிய வகையில் மேன்மை ஏற்படும். சிலருக்கு வண்டி வாகன சேர்க்கை அமையும். மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். மறைமுக - நேர்முக எதிரிகள் வலு குறைந்து உங்கள் கை மேலோங்கி நிற்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் வகையில் பாராட்டுக்களும், சகஊழியர்கள் வகையில் எதிர்பார்க்கும் உதவிகளும் வந்து சேரும். புதிய உத்தியோகத்திற்கு முயற்சி செய்து இருப்பவர்களுக்கு வேலைக்கான இன்டர்வியூ கார்டு வந்து சேரும் சுயதொழில், வியாபாரத்தில் தொழில் மேன்மையும், வரவேண்டிய தொகை வந்து சேரும் பாக்கியமும் உண்டாகும். புதிய தொழில் வாய்ப்புக்களால் மனதிற்கு மகிழ்ச்சி ஏற்படும். கூட்டுத் தொழில்களில் கூட்டாளிகளுடன் சகஜநிலையும், தொழிலாளர்களுடன் ஒற்றுமையும் நீடிக்கும். குடும்பத்தில் அமைதியும், இனிமையும் நிறைந்து காணப்படும். உங்களுடைய வாக்குக்கு மதிப்பு உண்டாகும். தாமதம் அடைந்து வந்த சுபகாரியங்கள் நிறைவேறும். பெண்களுக்கு சகல முயற்சிகளிலும் வெற்றி ஏற்படும். கலைஞர்களுக்கு நல்ல நண்பர்களின் ஒத்துழைப்பும், தொழில் மேன்மை, சொத்து சேர்க்கை உண்டாகும். அரசியல், பொதுச்சேவையில் தொடர்புடையவர்களுக்கு தாமதம், தடைகள் விலகி மேற்கொள்ளும் காரியங்களில் வெற்றி உண்டாகும்.


## அதிர்ஷ்ட நியூமராலஜி நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்



எல்லோரும் மனிதர்களே! எல்லோரும் எல்லாம் பெற வேண்டும். உழைப்பவர் அனைவரும் வெற்றி பெறுவதில்லை. ஏனெனில் வெற்றிக்கு அதிர்ஷ்டம் தேவை. வாழ்வில் அதிர்ஷ்டசாலியாவதற்கு ஆசைப்படாதவர்கள் எவரும் இல்லை. அதிர்ஷ்டம். இது யாருக்கும் சொந்தமில்லை. உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் சொந்தமானது. இதை எல்லோரும் பயன்படுத்தி வெற்றியுடனும், அதிர்ஷ்டத்துடனும் பெருவாழ்வு வாழலாம். அதிர்ஷ்டம் தரும் அதிநவீன அதிர்ஷ்ட நியூமராலஜி எண் கணிதத்தில் 52 வருடங்களுக்கும் மேல் ஆராய்ச்சி மூலம் அனுபவம் பெற்றவர். பிரபல இலங்கை, இந்திய, அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள், வியாபாரிகள், மற்றும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு அதிர்ஷ்டமாக வாழ அதிர்ஷ்டக் குறிப்புகள் அமைத்துக் கொடுத்தவர். எந்த வயதிலும் செல்வம், வியாபாரம், அதிர்ஷ்டமான பெயரமைப்பு, அதிர்ஷ்டமான கையொப்பம், கல்வி, தொழில், வியாபாரம், அதிர்ஷ்டமான தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டால்தான் வெற்றி உண்டாகும். நீங்கள் உங்களுக்கு ஏற்ற தொழில், வியாபாரத்தில் ஈடுபடும் போதுதான் ஊக்கமும், தன்னம்பிக்கையும், ஆர்வமும், மனமகிழ்ச்சியும் உண்டாகும். பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக அதிர்ஷ்டமும், பொருத்தமுமில்லாத தொழில், வியாபரத்தில் ஈடுபட்டால் வெற்றி கிட்டாது. எனவே உங்களுக்கு அதிர்ஷ்டமுள்ள பொருத்தமான தொழில், வியாபாரம், கூட்டு வியாபாரம், பங்காளிகள், உங்களின் அதிர்ஷ்ட வியாபாரத்திற்குறிய அதிர்ஷ்டமான பெயர்கள், நிறங்கள் மற்றும் தொழில் சம்பந்தமான எல்லா விபரங்களுடனும், காதல், காதல் பிரச்சினைகள், பொருத்தமான அதிர்ஷ்டத் திருமணம், திருமணத்தடை, திருமணமானவர்களின் பிரச்சினைகள், பெண்களுக்கு ஏற்படும் எல்லாவிதமான பிரச்சினைகள், குழந்தைச் செல்வம், உங்கள் அதிர்ஷ்டமான இரத்தினக் கற்களின் விபரங்கள், இரத்தினக்கற்கள் மனித வாழ்வை மாற்ற வல்லமை கொண்டவை. உங்களிற்கு ஏற்படும் தீமைகளில் இருந்தும், கண் திருஷ்டி, சூனியம், நோய்கள் போன்றவற்றிலிருந்தும் உங்களை தற்காத்துக் கொள்ள அதிர்ஷ்ட நியூமராலஜி விஞ்ஞான முறையினூடாக அதிர்ஷ்ட இரத்தினக்கல் மோதிரங்கள், அதிர்ஷ்டக்குறிப்புகள், இயற்கை வைத்திய விபரங்கள் மற்றும் எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்று நிரந்தரமாக என்றென்றும் நீங்களும் அதிர்ஷ்டமுடன் பெருவாழ்வு வாழலாம். நீங்களும் அதிர்ஷ்டமுடன் வாழ முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். விபரங்களுக்கு நேரில், தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொள்ளுங்கள். தபால் மூல சேவையும் உண்டு. இரகசியம் பேணப்படும். **உலகப்புகழ்பெற்ற அதிநவீன மனோதத்துவ நியூமராலஜி நிபுணர், மாமேதை:**



**தேசபந்து, தேசகீர்த்தி, மன்பஹா, மௌலானா,** Deshabandhu, Deshakeerthi, Manbaha, Moulana

**டாக்டர். ரசூல் மன்சூர் J.P. | DR. RAZUL MANZURR J.P.**

NO. 198/2A, FIRST FLOOR, HILL STREET, DEHIWELA, SRI LANKA.
Mobile: 071-4136254, 077-2037871, 078-5118019, Tel: (011) 3172645, (011) 3042406 Tele/Fax: (011) 2724666 Email: razulmanzurr@yahoo.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| ராசிகள் | நட்சத்திரங்கள் |
| --- | --- |
| மேஷம் | அசுவினி, பரணி, கார்த்திகை 1-ஆம் பாதம் முடிய |
| ரிஷபம் | கார்த்திகை 2-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசிரிஷம் 2-ஆம் பாதம் முடிய |
| மிதுனம் | மிருகசிரிஷம் 3-ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய |
| கடகம் | புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய |
| சிம்மம் | மகம், பூரம் உத்திரம் 1-ஆம் பாதம் முடிய |
| கன்னி | உத்திரம் 2-ஆம் பாதம் முதல், அஸ்தம், சித்தரை 2-ஆம் பாதம் முடிய |
| துலாம் | விசாகம் 4-ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம், 3-ஆம் பாதம் முடிய |
| விருச்சிகம் | விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய |
| தனுசு | மூலம், பூராடம், உத்திரம் 1-ஆம் பாதம் முடிய |
| மகரம் | உத்திராடம் 2-ஆம் பாதம் திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய |
| கும்பம் | அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய |
| மீனம் | பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய |


| நட்சத்திரங்கள் | கிரகம் | தெய்வம் |
| --- | --- | --- |
| கார்த்திகை, உத்திரம், உத்திராடம் | சூரியன் (ஞாயிறு) | சிவம் |
| ரோகிணி, அத்தம், திருவோணம் | சந்திரம் (திங்கள்) | சக்தி |
| மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் | செவ்வாய் | முருகன் |
| திருவாதிரை, சுவாதி, சதையம் | இராகு | காளி, துர்க்கை |
| புனர்பூசம், விசாகம், பூரட்டாதி | குரு (வியாழன்) | தட்சிணாமூர்த்தி |
| பூசம், அனுசம், உத்திரட்டாதி | சனி | சாஸ்தா |
| ஆயில்யம், கேட்டை, ரேவதி | புதன் | விஷ்ணு |
| மகம், மூலம், அசுவினி | கேது | விநாயகர் |
| பரணி, பூரம், பூராடம் | சுக்கிரன் (வெள்ளி) | மகாலஷ்மி |

## நட்சத்திரங்களும் அதிஷ்டம் தரும் தெய்வங்களும்

அஸ்வினி - ஸ்ரீ சரஸ்வதி தேவி
பரணி - ஸ்ரீ துர்கா தேவி
கார்த்திகை - ஸ்ரீ சரவணபவன்
ரோகிணி - ஸ்ரீ கிருஷ்ணன்
மிருகசீரிடம் - ஸ்ரீ சந்திர சூடேஸ்வர்
திருவாதிரை - ஸ்ரீ சிவபெருமான்
புனர்பூசம் - ஸ்ரீ ராமர்
பூசம் - ஸ்ரீ தட்சிணாமூர்த்தி
ஆயில்யம் - ஸ்ரீ ஆதிசேசன்
மகம் - ஸ்ரீ சூரிய பகவான்
பூரம் - ஸ்ரீ ஆண்டாள் தேவி
உத்திரம் - ஸ்ரீ மகாலக்ஷ்மி தேவி
அத்தம் - ஸ்ரீ காயத்திரி தேவி
சித்திரை - ஸ்ரீ சக்கரத்தாழ்வார்
சுவாதி - ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி
விசாகம் - ஸ்ரீ முருகப் பெருமான்
அனுசம் - ஸ்ரீ லக்ஷ்மி நாரயணர்
கேட்டை - ஸ்ரீ வராஹ பெருமான்
மூலம் - ஸ்ரீ ஆஞ்சனேயர்
பூராடம் - ஸ்ரீ ஜம்புகேஸ்வரர்
உத்திராடம் - ஸ்ரீ விநாயகப் பெருமான்
திருவோணம் - ஸ்ரீ ஹயக்கிரீவர்
அவிட்டம் - ஸ்ரீ அனந்த சயனப் பெருமாள்
சதயம் - ஸ்ரீ மிருத்யுஞ்ஜேஸ்வரர்
பூரட்டாதி - ஸ்ரீ ஏகபாதர்
உத்திரட்டாதி - ஸ்ரீ மகா ஈஸ்வரர்
ரேவதி - ஸ்ரீ அரங்கநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| டிசம்பர் | கார்த்திகை | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 15 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.14 - 1.44<br>4.44 - 6.14<br>7.44 - 9.14<br>10.44 - 12.14 | ஏகாதசி பின்னிரவு 5.48<br>அத்தம் முன்னிரவு 10.51<br>சித்தம் | |
| 02 | 16 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.45 - 3.15<br>7.45 - 9.15<br>6.15 - 7.45<br>9.15 - 10.45 | துவாதசி பின்னிரவு 3.51<br>சித்திரை மரணயோகம்<br>முன்னிரவு 9.31 | வைஷ்ணவ<br>ஏகாதசி விரதம் |
| 03 | 17 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.45 - 12.15<br>6.15 - 7.45<br>3.15 - 4.45<br>7.45 - 9.15 | திரயோதசி பின்னிரவு 2.10<br>சுவாதி முன்னிரவு 8.25<br>சித்தம், கரிநாள் | பிரதோஷ விரதம் |
| 04 | 18 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.15 - 10.45<br>3.15 - 4.45<br>1.45 - 3.15<br>6.15 - 7.45 | சதுர்தசி பின்னிரவு 12.49<br>விசாகம் முன்னிரவு 7.37<br>சித்தம் | |
| 05 | 19 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.46 - 6.16<br>9.16 - 10.46<br>12.16 - 1.46<br>3.16 - 4.46 | அமாவாசை முன்னிரவு 11.53<br>அனுஷம் முன்னிரவு 7.14<br>மரணயோகம் | அமாவாசை<br>விரதம் |
| 06 | 20 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.47 - 9.17<br>12.17 - 1.47<br>10.47 - 12.17<br>1.47 - 3.17 | பிரதமை முன்னிரவு 11.25<br>கேட்டை முன்னிரவு 7.16<br>சித்தம் | 3ம் கார்த்திகை<br>சோமவாரம் |
| 07 | 21 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.17 - 4.47<br>10.47 - 12.17<br>9.17 - 10.47<br>12.17 - 1.47 | துதியை முன்னிரவு 11.25<br>மூலம் முன்னிரவு 7.47<br>அமிர்தசித்தம் | |
| 08 | 22 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.17 - 11.47<br>4.47 - 6.17<br>7.47 - 9.17<br>10.47 - 12.17 | திருதியை முன்னிரவு 11.56<br>பூராடம் முன்னிரவு 8.48<br>அமிர்தம் | |
| 09 | 23 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.48 - 3.18<br>7.48 - 9.18<br>6.18 - 7.48<br>9.18 - 10.48 | சதுர்தசி பின்னிரவு 1.01<br>உத்தராடம் முன்னிரவு 10.18<br>சித்தம் | சதுர்த்தி விரதம் |
| 10 | 24 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.49 - 12.19<br>6.19 - 7.49<br>3.19 - 4.49<br>7.49 - 9.19 | பஞ்சமி பின்னிரவு 2.31<br>திருவோணம் மரணயோகம்<br>பின்னிரவு 12.15 | |
| 11 | 25 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.19 - 10.49<br>3.19 - 4.49<br>1.49 - 3.19<br>6.19 - 7.49 | ஷஷ்டி சித்தாமிர்தம்<br>பின்னிரவு 4.22<br>அவிட்டம் பின்னிரவு 2.32 | விநாயகர் ஷஷ்டி<br>விரதம் |
| 12 | 26 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.50 - 6.20<br>9.20 - 10.50<br>12.20 - 1.50<br>3.20 - 4.50 | ஸப்தமி முழுவதும்,<br>சதயம் பின்னிரவு 5.03<br>சித்தம் | |
| 13 | 27 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.50 - 9.20<br>12.20 - 1.50<br>10.50 - 12.20<br>1.50 - 3.20 | ஸப்தமி காலை 6.27<br>புரட்டாதி முழுவதும்<br>மரணயோகம் காலை<br>6.27 பின் அட்டமி | உதயத்தின் முன்<br>திருவெம்பாவை<br>பூஜாரம்பம் 4ம்<br>கார்த்திகை சோமவாரம் |
| 14 | 28 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.21 - 4.51<br>10.51 - 12.21<br>9.21 - 10.51<br>12.21 - 1.51 | அட்டமி மு.ப. 8.36<br>பூரட்டாதி மரணயோகம்<br>காலை 7.38<br>அட்டமி நவமி | |
| 15 | 29 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.21 - 1.51<br>4.51 - 6.21<br>7.51 - 9.21<br>10.51 - 12.21 | நவமி மு.ப. 10.38<br>உத்தரட்டாதி சித்தம் மு.ப. 10.05<br>நவமி மு.ப. 10.38 வரை | |
| 16 | மார்கழி<br>01 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.52 - 3.22<br>7.52 - 9.22<br>6.22 - 7.52<br>9.22 - 10.52 | தசமி பி.ப 12.19<br>ரேவதி பி.ப 12.22<br>சித்தாமிர்தம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 17 | 02 | ராகு 10.52 - 12.22<br>சுப 6.22 - 7.52<br>எம 3.22 - 4.52<br>குளி 7.52 - 9.22 | ஏகாதசி பி.ப. 1.44<br>அச்சுவினி பி.ப 2.15<br>அமிர்தசித்தம் | சுவர்க்கவாயில்<br>ஏகாதசி விரதம் |
| 18 | 03 | ராகு 9.23 - 10.53<br>சுப 3.23 - 4.53<br>எம 1.53 - 3.23<br>குளி 6.23 - 7.53 | துவாதசி பி.ப. 2.43<br>பரணி பி.ப. 3.44<br>சித்தாமிர்தம் | சனிப்பிரதோஷம்<br>காத்திகை விரதம் |
| 19 | 04 | ராகு 4.53 - 6.23<br>சுப 9.23 - 10.53<br>எம 12.23 - 1.53<br>குளி 3.23 - 4.53 | திரயோதசி பின்னிரவு 3.09<br>கார்த்திகை பி.ப. 4.41<br>சித்தம் | |
| 20 | 05 | ராகு 7.54 - 9.24<br>சுப 12.24 - 1.54<br>எம 10.54 - 12.24<br>குளி 1.54 - 3.24 | சதுர்த்தி பி.ப. 3.06<br>ரோகிணி பி.ப. 5.10<br>அமிர்தம் | பௌர்ணமி |
| 21 | 06 | ராகு 3.24 - 4.54<br>சுப 10.54 - 12.24<br>எம 9.24 - 10.54<br>குளி 12.24 - 1.54 | பூரணை பி.ப. 2.33<br>மிருக சீரிடம் சித்தம்<br>பி.ப. 5.11 கரிநாள் | பூரணை விரதம் |
| 22 | 07 | ராகு 12.25 - 11.55<br>சுப 4.55 - 6.25<br>எம 7.55 - 9.25<br>குளி 10.55 - 12.25 | பிரதமை பி.ப. 1.33<br>திருவாதிரை பி.ப. 4.45<br>சித்தம் | |
| 23 | 08 | ராகு 1.55 - 3.25<br>சுப 7.55 - 9.25<br>எம 6.25 - 7.55<br>குளி 9.25 - 10.55 | துதியை பி.ப. 12.08<br>புனர் பூஷம் பி.ப. 3.56<br>அமிர்தம் | |
| 24 | 09 | ராகு 10.56 - 12.26<br>சுப 6.26 - 7.56<br>எம 3.26 - 4.56<br>குளி 7.56 - 9.26 | திருதியை மு.ப. 10.25<br>பூசம் பி.ப. 2.49<br>மரணயோகம் கரிநாள் | சங்கடஹர<br>சதுர்த்தி விரதம் |
| 25 | 10 | ராகு 9.26 - 10.56<br>சுப 3.26 - 4.56<br>எம 1.56 - 3.26<br>குளி 6.26 - 7.56 | சதுர்த்தி காலை 8.24<br>பஞ்சமி பின்னிரவு 6.13<br>ஆயிலியம் மரணயோகம்<br>பி.ப. 1.26 | |
| 26 | 11 | ராகு 4.57 - 6.27<br>சுப 9.27 - 10.27<br>எம 12.27 - 1.57<br>குளி 3.27 - 4.57 | ஷஷ்டி பின்னிரவு 3.56<br>மகம் மரணயோகம்<br>மு.ப. 11.55, கரிநாள் | |
| 27 | 12 | ராகு 7.57 - 9.27<br>சுப 12.27 - 1.57<br>எம 10.57 - 12.27<br>குளி 1.57 - 3.27 | ஸப்தமி மரணயோகம்<br>பின்னிரவு 1.37 பூரம் -<br>சித்தம் மு.ப 10.18<br>பி.இ 1.37 ன் மேல் அட்டமி | |
| 28 | 13 | ராகு 12.28 - 1.58<br>சுப 4.58 - 6.28<br>எம 7.58 - 9.28<br>குளி 10.58 - 12.28 | நவமி மு.இ 9.11 அத்தம்<br>காலை 7.04<br>சித்திரை பி.இ 5.40,<br>சித்தம் | |
| 29 | 14 | ராகு 12.28 - 1.58<br>சுப 4.58 - 6.28<br>எம 7.58 - 9.28<br>குளி 10.58 - 12.28 | நவமி மு.ப 9.11<br>அத்தம் காலை 7.04<br>சித்திரை பி.இ 5.40,சித்தம் | |
| 30 | 15 | ராகு 1.59 - 3.29<br>சுப 7.59 - 9.29<br>எம 6.29 - 7.59<br>குளி 9.29 - 10.59 | தசமி மு.ப 7.17<br>சுவாதி பி.இ 4.31 அமித்த<br>சித்தம் | |
| 31 | 16 | ராகு 10.59 - 12.29<br>சுப 6.29 - 7.59<br>எம 3.29 - 4.59<br>குளி 7.59 - 9.29 | ஏகாதசி - மரணயோகம்<br>பி.ப 5.38, விசாகம் பி.இ<br>3.30 | ஏகாதசி விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து சமய விரதங்கள்

இந்துக்கள் ஆன்ம ஈடேற்றங்கருதிச் செய்யுஞ் சாதனைகளில் ஒன்று விரதம். விரதம் என்னும் சொல் உண்ணும் உணவை சுருக்குதல் அல்லது விடுத்தல் என பொருள்படும். உபவாசம், நோன்பு என்பன விரதத்துடன் தொடர்புடைய சொற்களாகும். உபவாசம் என்னும் சொல் இறைவனின் அருகே வசித்தல் என்ற பொருளைத் தரும். மேலும் ஒரு தினம் அல்லது பல தினங்கள் உணவு வகை எதனையும் விடுத்து இறை தியானத்தில் இருக்கும் நிலையே உபவாசம். விரதம் என்பது ஒரு வகை விஷேட வழிபாடு ஆகும். விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஐம்புலன்களையும் அடக்கி, திரிகரண சுத்தியுடன் இருத்தல் வேண்டும். மன அடக்கத்தை மேம்படுத்த முடியும். பெரியோர் கூறும் புண்ணியம் ஏழினுள் ஒன்று. விரதம் அனுஷ்டிப்பதனால் மனம் புத்தி முதலிய உட்கருவிகள் தூய்மை அடையும். இதனால் ஞானம், நல்லறிவு கைகூடும்.

"மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்". - ஆறுமுகநாவலர்

**விரதங்களின் வகைப்பாடுகள்**

இந்து மதப் புராணத்தில் 27 வகையான உபவாச விரதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை

01. உமிழ்நீரைக் கூட விழுங்காமல் இருப்பது. இதை யோகிகள் மட்டுமே கடைப்பிடிப்பார்களாம்.

02. தேன் அல்லது இளநீர் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.

03. பசுவின் பாலை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.

04. எந்த உணவுமில்லாமல் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் நீரை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.

05. காலை நேரம் மட்டும் உணவருந்தி உபவாசம் இருத்தல்.

06. பகல் நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

07. இரவு நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

08. மூன்று நாட்கள் தொடர்ந்து காலை நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

09. மூன்று நாட்கள் தொடர்ந்து மதிய நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

10. மூன்று நாட்கள் தொடர்ந்து இரவு நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

11. கடுமையான விரதங்களுக்கு 21 நாட்கள் வெறும் பசும்பால் மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.

12. மூன்று நாட்கள் பகல் ஒருவேளை மூன்று கைப்பிடி உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

13. இரவில் மட்டும் மூன்று கைப்பிடி அளவு உணவு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

14. ஒருநாள் பகல் நேரத்தில் சுத்தமான எள்ளுப் புண்ணாக்கு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

15. ஒருநாள் இரவில் மட்டும் பசுவின் பால் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

16. ஒருநாள் மோரை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.

17. ஒருநாள் முழுவதும் சுத்தமான நீரை மட்டுமே அருந்தி உபவாசம் இருத்தல்.

18. ஒருநாள் முழுவதும் பொரிமாவு (புழுங்கல் அரிசியை வறுத்து நன்கு பொடித்து நெய், தேங்காய், சர்க்கரை ஆகியவற்றை போட்டுப் பிசைந்து வைத்திருப்பது) மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

19. ஒருநாள் முழுவதும் தினை மாவு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

20. தேய்பிறை அன்று ஆரம்பித்து வளர்பிறை முடிந்து திரும்பத் தேய்பிறை நாட்கள் வரை தினம் ஒருபிடி அன்னத்தை மட்டும் சாப்பிட்டு பின்னர் தினம் ஒவ்வொரு பிடி அன்னத்தை அதிகமாக்கிக் கொண்டு சுக்கிலபட்சம் முடிந்த பிறகு திரும்ப ஒவ்வொரு பிடி அன்னமாகக் குறைப்பது என் உபவாசம் இருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஒருநாள் முழுவதும் வில்வ தழையையும் நீரையும் மட்டுமே அருந்தி உபவாசம் இருத்தல்.

22. ஒருநாள் முழுவதும் அரச இலைத் தளிர்களையும், நீரையும் அருந்தி உபவாசம் இருத்தல்.

23. ஒருநாள் முழுவதும் அத்தி இளந் தளிர்களையும், நீரையும் மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.

24. மாமிச உணவுகள், மசாலாக்கள் இல்லாத சைவ உணவுகளை மட்டுமே குறைந்த அளவு சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.

25. இரு வேளை உணவுடன் உபவாசம் இருத்தல்.

26. முதல் நாள் ஒரு வேளை பகல் உணவு மட்டும், மறுநாள் இரவு மட்டும் உணவுடன் உபவாசம் இருத்தல்.

27. வாழைக்காய், பூண்டு, வெங்காயம், பெருங்காயம் ஆகியவை சேர்ந்த உணவுகளை மட்டும் சேர்த்துக் கொள்ளாமல் உபவாசம் இருத்தல்.

இந்த உபவாச விரதங்களில் எதைக் கடைப்பிடித்தால் நல்லது என்கிறீர்களா? உங்கள் உடல் நிலைக்கும், சூழ்நிலைக்கும் தகுந்த எந்த உபவாசத்தையும் நீங்கள் தேர்வு செய்து கொள்ளலாம். ஆனால் எதுவுமே சாப்பிடாமல் நீர் மட்டும் அருந்தி உபவாசம் இருப்பதே சிறந்த விரத முறையாகும்.

**விரத வகைகள்**

இந்து மதத்தில் இருக்கும் பல்வேறு கடவுள்களுக்கும் பல விரதங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இவை கடவுள் வழிபாட்டிற்கேற்ப மாறுபாடுகளைக் கொண்டுள்ளது.

விநாயக விரதங்கள்

1. விநாயக சதுர்த்தி
2. ஆவணி சதுர்த்தி
3. சங்கடஹர சதுர்த்தி விரதம்
4. விநாயக சஷ்டி விரதம்



சிவ விரதங்கள்.

1. ஆனி உத்தரம்
2. திருவாதிரை
3. சிவராத்திரி
4. பிரதோஷ விரதம்

சக்தி விரதங்கள்

1. நவராத்திரி
2. வரலட்சுமி நோன்பு
3. கேதாரகௌரி விரதம்
4. ஆடிப்பூரம்
5. ஆடிச் செவ்வாய்
6. பங்குனித் திங்கள்
7. மாசி மகம்



கந்த விரதங்கள்.

1. கந்த சஷ்டி
2. ஆடிக்கிருத்திகை
3. வைகாசி விசாகம்
4. தைப்பூசம்

விஷ்ணு விரதங்கள்

1. ஏகாதசி விரதம்



இப் பகுதியில்
விளம்பரம்
செய்ய
ரூபா 2500/=
மாத்திரமே.
தொடர்புகளுக்கு
0777 555 026
Flex Publications
(A Subsidiary of Flex Graphic)
04, IBC. Road, Wellawatte.
Tel:- 2364157, 2506114 Fax:-2501766
www.flexgraphic.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

## திருச்சிற்றம்பலம்

### விநாயகர் வணக்கம்

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

ஆனை முகன் ஆறுமுகன்
அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணி பதம் நாடு.

## தேவாரம்

### திருஞானசம்பந்தர் (மூன்றாம் திருமுறை)

தலம்: திருநல்லூர்ப் பெருமணம் பண்: கௌசிகம் இராகம்: பைரவி

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச்சிவாயவே.

### திருநாவுக்கரசு நாயனார் (நான்காம் திருமுறை)

தலம்: திருஅதிகை வீரட்டானம் பண்: காந்தாரபஞ்சமம் இராகம்: கேதாரகௌளை

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

### சுந்தரமூர்த்தி நாயனார் (ஏழாம் திருமுறை)

தலம்: திருப்பாண்டிக்கொடுமுடி பண்: பழம் பஞ்சுரம் இராகம்: சங்கராபரணம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின் றிருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

## திருவாசகம்

### மாணிக்கவாசக சுவாமிகள் (எட்டாம் திருமுறை)

திருக்கதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை யார்கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழவி டேன் உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பதி தரிசனம்
# Tour Package




**flex**
**Travels & Tours**
***The Total Travel Solution***
(A Subsidiary of **Flex Graphic**)

4, IBC Road, Colombo 6. Tel: (+94) 11 7207787
**Hotline: (+94) 775-952357**
Fax: (+94) 11 2501766
E-mail: flextravels04@gmail.com

## COST INCLUDES

> Return Air Ticket
> A/C Transport
> Accommodation
> Breakfast > Lunch
> Special Entrance Ticket


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNAI NAGAA FOOD CITY

**Food City**

**Wellnes & Health Foods**

**House Hold**

**Baby Center**

**Party & Entertainment Center**

**Gift Center**

**Fancy Center**

No: 175, K.K.S.Road, Jaffna. Tel: (021) 7390192-3, Fax: (021) 7390195
E-mail: anfccolombo@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org